REGD No. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 27—1—52 | இதழ் 30

# வெட்கமில்லையா? விலகுங்கள்!

அண்ணல்

"மந்திரிகள் தோல்வி பற்றி ருமே வருந்தவில்லை."

"பதவியிலிருந்து விரட்டப்பட்ட ல் சென்னை மக்கள் குதூகலிக் றார்கள்."

*

தேர்தல் அலைகள், தேன் துளி ள் போல தினசரி காங்கிரஸ் ழ்ச்சி பற்றிய பட்டியல்களைத் ந்து கொண்டிருக்கின்றன. ஐந் ாண்டுக் காலம் இவர்கள் பிடியில் டந்து அல்லல் பட்டோமே, என் ற பெருமூச்சு, எல்லோருடைய தயத்திலுமிருந்து கிளம்பி பரவிக் காண்டிருக்கிறது. காங்கிரசுக்குத் தோல்வி — காங்கிரஸ் மந்திரிகள் முறியடிக்கப்பட்டனர் — காங்கிர சுக்கு மெஜாரிட்டி இல்லை—காங்கி ரஸ் ஆட்சி பீடம் ஏற இனி வாய்ப் பில்லை—என்கிற மகிழ்ச்சி உரை பாடல்கள் மக்கள் மன்றத்தில், வலம் வரத் துவங்கிவிட்டன. இத யத்தைக் கசக்கிப் பிழிந்தது ஒழிந் தது என்ற எக்களிப்பு, அக்கிரம ஆட்சி முறை அகலும் என்ற ஆனந் தம், கள்ளமார்க்கெட் காவலர்கள் ஒழிந்தார்கள் என்ற குதூகலம், கொடுமைகள் ஒழியும் என்கிற மகிழ்ச்சி எங்கும் பரவிக்கிடக் கிறது. ஐந்தாண்டுக் காலம், காங்கி ரஸ் ஆட்சியில் மக்கள் பெற்ற வேத னைகள் கொஞ்ச நஞ்சமல்லவே— எனவே, புயல் ஓயும், புதுமணம் பரவும் என்கிற பூரிப்போடு கண் களிலே புது ஒளி பறக்க, நிற்கிறார் கள். எங்கும் இந்தக் காட்சியைக் காண்கிறோம்!

ஆண்ட மந்திரிகள்!!

அறுவர் தோற்றனர்!!

இந்தச் செய்தி பற்றி, ஆனந்த கீதம் பாடுகிறார்கள், மக்கள். கண் ணுக்கெதிரே தெரியும் இந்தக் காட் சியைத்தான், 'தினசரி' இதழ், கொட்டை எழுத்துக்களில், தலைப் பில் நாம் தந்திருப்பது போல, வெளியிட்டிருக்கிறது. 'தினசரி சொல்கிறது —காங்கிரஸ் செல்லப் பிள்ளையாக, சர்க்காரின் ஆசியும் ஆதரவும் பெற்ற ஏடு— தெரிவிக் கிறது, மக்கள் மன்றத்தின் எதி

## ஜனநாயகம் : : புதிய பாடம்!

### தோற்ற மந்திரிகள் ஏன் இன்னமும் ஆட்சி பீடங்களில் அமர்ந்திருக்க வேண்டும்?

இது, மக்கள் சக்தியின் ஏகோபித்த குரல்—ஜனநாயகத்தின் கேள்வி.

ஆனால் பிரதமர் குமாரசாமி ராஜா கூறுகிறார், பதவியைவிட்டு ஓடுவது பொறுப்பற்றதனம், தான் விலகினாலும் தன்னையேதான் அழைப்பார், கவர்னர் என்று!

காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் தலைவர் அவர். அவர் தோற்கடிக்கப் பட்ட அன்றே தமது சட்டசபைக் கட்சியைக் கூட்டியிருக்கவேண்டும். உடன் கட்சிக்கூட்டம் கூட்டப்பட முடியாவிட்டால், சுற்றறிக்கையாவது விட்டுக்கேட்டிருக்கவேண்டும், தோற்ற தன்னை நீக்கி, வேறொருவரை, கட்சித் தலைவராக தெரிந்தெடுக்கவெண்டுமென்று. அவர் செய்யாவிட்டாலுங்கூட, மற்ற காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களாவது, கட்சிக்கூட்டத்தைக் கூட்டி, தோற்ற பிரதமரைத் தலைவர் பதவியினின்றும் நீக்கிவிட்டு, வேறொருவரைத் தெரிந்தெடுத்திருக்க மேண்டும். இவ்விரு முறைகளுள், ஏதாவது ஒருமுறை கையாளப்பட்டிருந்தாலும், குமாரசாமிராஜா இடைக்காலப் பிரதமராக வந்திருக்கமுடியாது, கவர்னரும் அவரையே அழைத்திருக்கமாட்டார். இதற்குப் பயந்துதான் அவர், கவர்னர் தன்னையே அழைப்பார் என்று கூறிவிட்டு, ஆட்சி பீடத்திலேயே அமர்ந்திருக்கிறார்! புதிய ஜனநாயக பாடம் படிக்கிறார்!

**எந்த ஜனநாயக ரீதியில் இது பொருந்துமோ—அவர்தான் கூறவேண்டும்!**

ரொலியை. மக்கள் வருந்தவில்லை, இந்த மதோன்மத்தர்கள் ஒழிந்தது கண்டு! மகிழ்கிருர்கள்!! சுமை யொன்று நீங்கியது போன்ற பெரு மூச்சொன்றை விட்டுவிட்டு, 'அப் பாடா! தொலைந்தார்கள்!!' என்று ஆனந்த கீதம் பாடத் துவங்கிவிட் டார்கள்.

கேள்விப்படாத தோல்வி, படித் தறியாத பட்டியல், பரிசாகத் தரப் பட்டு வருகிறது — காங்கிரசுக்கு. "யாருமே எதிர்பார்க்கவில்லை இது போல நடக்குமென்று" என்ற, வேதனையோடு, தேசிய இதழ்களின் திருமனைகளிலும், தேசிய திருவா ளர்களின் சந்திப்புகளிலும், ஏமாற் றக் குரல்கள் எழும்ப ஆரம்பித்து விட்டன.

இறுமாந்து கிடந்தோர் — வீசி யெறியப்பட்டு விட்டனர்! துப் பாக்கியால் துரைத்தனம் நடாத்தக் கனவு கண்டோர் படுகுழியில் வீழ்ந்துவிட்டனர்! ஒன்பது மந்திரி கள்—அவர்களிலே அறுவர் தோற் கடிக்கப்பட்டனர்!

இந்த முடிவு, சாதாரணமான தல்ல. ஆட்சியிலமர்ந்தோரை, விரட்டியிருக்கின்றனர் — 'இவர் களை'த் தேர்ந்தெடோம்! மாபாபி கள்போலப் பதைக்கவிட்டனர் எம்மை—இவர்கள் தேவையில்லை!" என்று தீர்ப்பு தந்துவிட்டனர்.

எங்குமே காண முடியாத காட்சி—இங்கே, வேதனைக்குப் பலியான மக்களால் சாதிக்கப்பட்டு விட்டது. மந்திரி சபையில் அங்கம் வகித்த அத்தனை சூத்ரதாரிகளை யும்— விரட்டியடித்துவிட்டார்கள்.

இந்தப் பாடம், ஜனநாயக உல குக்குக் கிடைக்கும், நல்லதோர் எச்சரிக்கை—பொன் முடிவு— பூரிப்புத் தென்றல். இவர்களைத் தோல்வியுறச் செய்ததன் மூலம், மக்கள் 'மாஜிகளாக' இவர்களை ஆக்கிவிட்டார்கள் என்பது மட்டு மல்ல, 'இந்த மந்திரிமார்களை பொறுப்புள்ளவர்கள் என நினைத்து அமர்த்தினோம் — ஏமாந்தோம் — இடர்பட்டோம். இனி ஏமாருேம்— இவர்கள் பொறுப்புள்ளவர்களல்ல! எங்கள் பிரதிநிதிகளாக ஆகஇலாயக் குள்ளவர்களல்ல!!' என்ற, நன் முடிவையும் தெரிவித்துவிட்டார் கள்.

ஆனல், நமது 'மாஜி'யாகவிருக் கும் தோழர் குமாரசாமி ராஜா வுக்கு, 'தோல்வித் தோடா' பெற்ற பிறகு ஞானோதயம் அரும்பி, 'மக் களுக்கு பொறுப்புள்ளவராக' நடக்கவேண்டும் என்ற ஆசையைத் தந்திருக்கிறது — உண்மையென்று எண்ணுகிர்கள்!—அதுபோல அவர் சொல்கிருர்!!

பத்திரிகை நிருபர்கள் அவரைச் சந்தித்துக் கேட்டனராம்.

"ஐயன்மீர்! தோற்ற தாங்களும் பிற மந்திரிகளும் மீண்டும் பதவியில் இருக்கக் கூடாதென்று — எதிர்க் கட்சிகளும் மக்கள் மன்றமும் முழக்கமிடுகின்றனவே—தெரி யுமோ?"

'தெரியும்! தெரிகிறது!!"–குமார சாமியார், பதில் தந்திருக்கிருர்.

"பின் ஏன் ராஜினமா செய்ய வில்லை?"—நிருபர்கள், கேள்வி.

"அது பொறுப்பற்றதனம். அடுத்த மந்திரி சபை அமைக்கப் படும் வரை நாங்கள்தான் இருக்க வேண்டும்."

குமாராசாமி அவர்களுக்கு, சர்க் காரை நடத்தும் 'பொறுப்பு' வந்தி ருக்கிறதே—சரி, பரவாயிலலை! தேர் தல் இத்திருவாசகத்தை தயாவது தெளிவுபடுத்தியிருக்கிறது—என்ற எண்ணத்தோடு, அவர் நிருபர் களுக்கு தந்த விளக்கத்தைக்கூர்ந்து கூர்ந்து தேடினோம் — அன்று முதல் இன்று வரை தினசரி இதழ் களின் ஒவ்வொரு வரியையும் கவ னிக்கிறோம்—நாம் எதிர்பார்க்கும் விளக்கம் பற்றி சிறு குறிப்பு கூட வரவில்லை!

"மந்திரியார் பொறுப்பை அறிந் திருக்கிருர் — மக்களை நிர்க்கதிக்கு ஆளாக்கக் கூடாது, புது மந்திரி மார்களிடம் ஒப்படைக்கும் வரை யில் நாமே நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் வந் திருக்கிறது. மக்களுக்குத் துரோ கம் செய்யக் கூடாதென்கிற நற் புத்தி வந்திருக்கிறது" என்ற எண் ணத்தோடுதான், நாம் இன்னும் ஒரு பதில் வருமா என்று காத்திருந் தோம். நாம் எதிர்பார்க்கும் பதில், வராதென்று, தெளிவாகத் தெரிய வருகிறது, இப்போது—நாம் காத் திருந்த நாட்கள், நகர்ந்து கொண் டேயிருப்பதால்.

மந்திரி நாற்காலிகளை விட்டு செல்வது 'பொறுப்பற்றதனம்' என்று கூறிய குமாரசாமி அவர் களிடமிருந்து நாம் எதிர்பார்த்த பதில் வேறெதுவுமல்ல — மாத மாதம் தங்களுக்கென ரூ 1500 சம் பளமாக வாங்கிக்கொண்டு வருகிறு களே, அது சம்பந்தமானதுதான்

அமைச்சர் பீடத்திலிருப்பவ பொறுப்போடு மக்களுக்கு துரோ மிழைக்காமல் நடக்கும் நோக்கு டன் தாங்கள் மந்திரி சபையிலிருப் பதாகத் தெரிவித்தாரே என்ற நல் லெண்ணம்தான், இவரிடமிருந்து அந்தப் பதிலை எதிர்பார்க்கும் படி செய்தது. "மக்கள் எங்களை நிரா கரித்து விட்டார்கள். ஆனலும் புது ஆட்சி அமைக்கப்படும் வரை எங் கள் கடமையைச் செய்வதுதான் முறை. அப்படிச் செய்யாவிடில் அது துரோகமாகும். ஆகவே மந் திரிகளாக இருக்க வேண்டியிருக் கிறது. மந்திரிகளாக இருப்பொம்— நாட்டு நன்மைக்காக. ஆனல் அதைச் சேவையெனக் கருது வோமே தவிர, கூலிக்குழைப்பதாக யாரும் கருத வேண்டாம். இதோ இது வரை நாங்கள் வாங்கிவந்த சம் பளத் தொகை ரூ 1500யையும் இன்று முதல் புது ஆட்சி அமை யும் வரை பெறமாட்டோம்—வேண் டுமானல் எங்கள் செலவுக்கு கொஞ் சம் 'அலவன்சு' பெற்றுக் கொள் வோம்".

இத்தகைய விளக்கத்தைத்தான் நாம் எதிர்பார்த்தது. ஆனல், 'பொறுபபு' உணர்ந்த குமாரசாமி யாரோ, இதுபற்றி எதுவும் கூற வில்லை! மாதாமாதம் நமது வரிப் பணத்தில் — வாழத்தான் போகி ருர்கள்!!

"வரிகட்டும் மக்கள், நிராகரித்து விட்டார்கள். ஆனல் இத் தியாக சீலர்கள்—அவர்கள் வரிப்பணத்தில் விட்டகுறை தொட்டகுறையாக, கொஞ்சநாளைக்காவது வாழ்வோம் என்று கருதுகிருர்கள்! என்னே கேவலம்! அநாகரீகம்!!" என்று நாம் கூறவில்லை. ஆனல் அத்தகைய எண்ணம் பலர் மனதில் எழும்பின லும் தவறில்லை!!

ஒரு மந்திரியின்மீது தங்கட்கு நம்பிக்கையில்லையென்று மக்கள் தெரிவித்துவிட்டால், உடனே அவ் வமைச்சர் [illegible]

ட்டுச் செல்வதுதான்—ஜனநாயக றை.

ஆனல் இங்கு! மந்திரிமார்களில் ருவரல்ல — முதல்வரே தோற்றிருக்கிறார். முதல்வரோடு மட்டும் டிந்துவிடவில்லை, தோல்விப் படம். அவரோடு, மந்திரிசபையின் த்ரதாரிகளாக இருந்த அறுவர் ஆமாம்! ஆறுபேர்!! — தோற்றிருக்கிறார்கள். கிட்டத்தட்ட மந்திரி பையே தோற்றிருக்கிறது. மந்திரி ார்கள்மட்டுமல்ல, அவர்களைச் ார்ந்திருக்கும் கட்சியும் எதிர்க் ட்சிகளால் மூக்கறுபட்டுக்கொண்டிருக்கிறது. ஆனல், 'துரத்தப் ட்டோரோ' இன்னும் இரண்டு ாதத்திற்கு மேல் பதவி வகிப் பாம் என்று சொல்கிறார்கள்! ளக்கம் தருகிறார்கள்!!

விளக்கத்திலாவது, விவேகம் லந்திருக்கிறதா என்றால், அனுாபம்தான் வருகிறது — இவர்கள் மீது.

'தோற்ற மந்திரிகள் புது மந்திரி சபையை அமைக்கும்வரை பதவியிலிருக்கலாம் என்கிற இங்கிலாந்து முறையின்படியும், அரசியல் திட்டம் அனுமதிப்பதாலும் பதவியிலிருப்பது தவறு அல்ல''—இவ்விதம் சொல்கிறார்கள், விளக்கம் என்ற பெயரால்.

ஆனல், இங்கிலாந்திலே என்ன நடைபெற்றதென்பது, கண்கூடாக அறிவோம் நாம். அண்மையில் அங்கே, பொதுத் தேர்தல் நடைபெற்றது. தனதுகட்சி—தானல்ல!—தோற்றுவிடும் என்று அட்லிக்கு—பிரிட்டிஷ்பிரதமர்பொறுப்பிலிருந்தவர் — அறிகுறிதென்பட்டது. உடனே ராஜினமாவை ஒப்படைத்துவிட்டு வெளியேறினர்! ஒரு வினடிகூட 'சட்டம், வழக்கம்' பற்றிப்பேசவில்லை!! ஆனல், இவர்கள், தேர்தல் முடிந்தபிறகும் பிப்ரவரி, மார்ச்சு, என்று மாதக் கணக்கில் காலந்தள்ளுவோம் என்றுகூறுகிறார்கள்!!

காலந்தள்ளுவோம்— சென்னைக் கடற்கரையின் காற்றை அனுபவிப்போம் என்று கூறுவதுமட்டுமல்ல, அடுத்த ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தை (பட்ஜட்) யும் வகுத்துவிட்டுத்தான் போவார்களாம்!!

மதிப்பிழந்து, மக்களால் வெறுத்தொதுக்கப்பட்ட இவர்களைப் பதவி ஆசை படுத்தும் பாட்டைப்பற்றி நினைக்கும்போது, பரிதாபம் வருகிறது நமக்கு.

மந்திரிகள் மக்கள் நம்பிக்கையை இழந்தோமென்று தெரிந்ததும், முதலில் தங்களது ராஜினமாக்களை, கவர்னரிடம் சேர்ப்பிக்கவேண்டும்—கவர்னர் விரும்பி கேட்டுக்கொண்டால் புது மந்திரி சபை ஏற்படும் வரை பொறுப்பிலிருக்கலாம், அதுவும் விருப்பம் இருந்தால்.

இதுதான் ஜனநாயக முறைப்படி நியாயம். ஆனல், இவர்களோ 'நாங்களே இருப்போம்!' என்று கூறுகிறார்கள். காரணம், ராஜினமா செய்தால், கவர்னர் மீண்டும் புது ஆட்சி அமையும்வரை இருங்கள் என்று கூறுவாரோ, மாட்டாரோ என்கிற ஐயம், இவர்களுக்குள்ளாகவே எழும்பியிருப்பதுதான். ஏனெனில், இவர்கள் தோற்றவர்களாயிற்றே! ''தோற்றார் வேண்டாம்—புது ஆட்சி வரும்வரை காங்கிரஸ்காரர்களே வேண்டுமானலும் இருக்கட்டும். ஆனல் வெற்றிபெற்றோராக—யாராவது அப்பொறுப்பை வகிக்கட்டும்'' என்று மக்கள்குரலெழுப்பினல், இரண்டு மூன்று மாதங்களாவது உல்லாசமாகக் காலந்தள்ளலாம்என்கிற நப்பாசை வீணகிவிடுமே என்கிற பயம்போலும்!!

பதவி ஆசையால் கண்ணியத்தையும் கவுரத்தையும் இழக்கிறார்கள். பாபம்! பரிதாபம்,!

மக்கள் உதறித் தள்ளிய பின்னும் அரசு பீடத்தில் அமர்வது அழகல்ல—அநாகரீகம்! அதையுணர்ந்து உடனே இந்த மகானுபாவர்கள் வெளியேறினல் நல்லது—அரும்பும் ஜனநாயகம் வளர வழி செய்தவர்கள் ஆவார்கள். இல்லையென்றால், 'பதவியாசை கொண்டோர்' என்று இவர்கள், இந்தஐந்தாண்டுக் காலத்தில், பெற்றிருக்கும் 'நல்ல பெயரை' முத்திரையாகப் பொறித்துக் கொண்டேசெல்வார்கள்!

★

# வாழ்க திண்டிவனம்!

★

வடவருக்கும், அவர் தம் வால் பிடித்து திரிவோருக்கும் திண்டிவனம் நல்ல பாடம் போதித்துவிட்டது.

திண்டிவனத்தின் தீரத்தை, திராவிடம் புகழ்கிறது — அதே நேரத்தில் திராவிட மென்றாலே தீராத விஷமாகக் கருதிடுவோரோ, திண்டிவனம் என்றவுடன் நடு நடுங்குகின்றனர்.

பார்லிமெண்ட் தேர்தலில் திண்டிவனம் தொகுதியில், வடநாட்டு பனியா, பெரிய பண மூட்டை, பத்திரிகைத் தொழில் மூலம் திராவிடத்தை சுரண்டிடும் முதலாளி கோயங்காவை காங்கிரஸ் சார்பில் நிறுத்தியிருந்தனர். அப்பொழுதே கண்டித்தோம் நாம். நாட்டிலுள்ள நல்லறிவாளர்கள் அனைவருமே நம் பக்கம் தான் நின்றனர்.

பனியாவை எதிர்த்தார் செந்தமிழர் திருக்குறள் முனுசாமி. இருப்புப் பெட்டியுடன், திருக்குறள் மோதிற்று!

மாட்டுப் பெட்டியின் பக்கத்தில் பனியா—சேவல் பெட்டியின் அருகில் திராவிடத்தின் இலட்சிய முரசு கொட்டும் வீரர்.

சேவல் தான் கூவிற்று—மாடோ மருண்டோடி விட்டது!

கோயங்காய், தேர்தல் இலவங்காய் கனியாகும் என்று காத்திருந்தார். அது வெடித்து விடவே விரண்டோடி விட்டார்.

சேவலின் கூவல், இன்று அகில இந்தியாவிலும் கேட்கிறது. திண்டிவனம், தீரர்புரியென்று, அந்தக் கூவல் எதிரொலிக்கிறது.

திண்டிவனம் தீரர்களைப்பாராட்டுகிறோம். திருக்குறள் முனுசாமியின் வெற்றி திராவிடத் தனியரசு பிரச்சினையின் வெற்றியெனக் கருதுகிறோம். அவரையும் வாழ்த்துகிறோம். திராவிட மக்களின் உள்ளத்தை எடைபோட உதவிய தோற்ற கோயங்கா அவர்களுக்கும் நன்றி செலுத்துவோமாக!

★

திராவிடநாடு

காஞ்சி] 27—1—52 [ஞாயிறு

# மன்னியுங்கள்! மன்னியுங்கள்!!

★

குற்றங்கள் செய்துவிட்டார்கள் எங்கள் குணங்கெட்ட மந்திரிகள்—குரங்காட்டம் ஆடிவிட்டார்கள் — கோபித்துக்கொள்ளாதீர்கள். கோணல் திட்டம் தீட்டிவிட்டார்கள். ஆத்திரப்படாதீர்கள்.

வீண் செலவுகள் செய்து விட்டோம்—அது எங்கள் புத்திகெட்டத்தனம். விபரீதமாக நடந்துவிட்டோம். அது எங்கள் அறியாமையின் விளைவு! ஐந்து ஆண்டுகளில் நாங்கள் செய்த குற்றங்கள் குன்று உயரம் — பிழைகள் பெரிய சமுத்திரம், இருந்தாலும் மன்னியுங்கள்! மன்னியுங்கள்!! மன்றாடிக் கேட்கிறோம், மண்டியிட்டு வேண்டுகிறோம். எங்கள் தவறுகளை உணர்கிறோம். வருந்துகிறோம். மன்னிப்புக் கேட்கிறோம். பழைய தவறுகளை பெரிய மனதுடன் மறந்துவிடுங்கள். மன்னியுங்கள்! மன்னியுங்கள்!!

சோகக் குரலில், பேசியிருக்கிறார், பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல்

பட்டீல் பாராளு மன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டதைப் பாராட்ட, இந்திய வர்த்தக சங்கத்தார் விருந்தளித்த பொழுது, அவர் இப்படி, காங்கிரஸ் தவறு செய்துவிட்டது, மக்களே மன்னியுங்கள், என்று பேசியுள்ளார்.

பட்டீல் பாராளுமன்றத்திற்கு தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டார். அவர் பாராட்டு விழாவில், சோகக் குரலில் பேசுகிறார். அவரும் ஒரு மாகாணத்தின் காங்கிரஸ் ராஷ்டிரபதிதான்.

ஆனால், தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர் காமராஜர் இன்னமும், காங்கிரஸ் பிரதாபம் பற்றித்தான் பேசுகிறார்.

பம்பாயாவது காங்கிரஸ் மெஜாரிட்டியைக் காப்பாற்றியிருக்கிறது. அங்கே பிரதாபம் பற்றிப் பேசினால் அர்த்தமுண்டு. அங்கே புலம்பல்—ஆனால் இங்கே பிரதாபம்! ஆறு காங்கிரஸ் மந்திரிகள் 'அரோகரா' வாகிவிட்ட இங்கே பிரதாபம்—காங்கிரஸ் மெஜாரிட்டியை காப்பாற்ற முடியாத இங்கே பிரதாபம்—இதுதான் விசித்திரம்!

ஆனால் தோற்ற முதல் மந்திரி குமாரசாமி ராஜா, 'இந்தத் தேர்தல் காங்கிரஸ்காரர்களின் கண்களைத் திறந்துவிட்டது' என்று கூறியுள்ளார்.

கண்கள் திறந்துள்ளன என்பதை அவர் கண்கள் கண்டுபிடித்து விட்டன!

அது மட்டுமல்ல, காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்த இரண்டொரு திங்களுக்குள் அதிகார போதையால், அவர்கள் கண்களை மூடிக் கொண்டார்கள். அதனால்தான் ஐந்தாண்டாக நாட்டு மக்களின் கண்கள் திறந்து பல நாட்களாகிவிட்டன என்பதை உணராமல் இருந்து வந்தார்கள்.

தேர்தல் வந்து தோல்வி கண்ட பிறகுதான் அவர்கள் கண்கள் திறந்தன. ஆனால் மக்களின் கண்கள் திறந்துவிட்டன, முன்னரே! — பிரதமர் கண்களை திறந்ததோடு நிறுத்திவிட்டார்.

குமாரசாமி ராஜாவின் கண்கள் திறந்துவிட்டன — வாய் திறக்கவில்லை. தோல்வியால் ஏற்பட்ட துயரங்கூட இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால் பட்டீல் சொல்லிவிட்டார். பகிரங்கமாக குற்றங்களை ஒப்புக்கொண்டுள்ளார்.

அதுமட்டுமல்ல, பல ராஜ்யங்களில் மந்திரிசபைகளை காங்கிரஸ் அமைக்க முடியுமோ, முடியாதோ தெரியவில்லை. மத்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் ஒரே அரசியல் கட்சியாரால் அமைக்கப்படாவிட்டால் எத்தனையோ தொல்லைகள் உண்டு என்றும் அவர் கூறியுள்ளார்.

பட்டீல் பாவ மன்னிப்புகோரி மக்கள் மன்றத்தில் நின்றாலும், காலம் கடந்துவிட்டது என்பதைக் கவனப்படுத்துகிறோம்.

அவர்கள் ஆட்சியில் இருக்கு பொழுதே, இம்மாதிரி மன்னிப்பு பேச்சுகள் பேசி, மக்கள் மன்ற தினரிடம், மன்னிப்புப் பெற்று ஆட்சிக் குழுவார் செய்யும் தவ களைத் திருத்தியிருந்தால் அர்த் முண்டு.

அப்பொழுது கண்களை மூடி கிடந்துவிட்டு, வாயையும் திறக்க மல் இருந்துவிட்டு, இப்பொழு மன்னியுங்கள், மன்னியுங்க என்று பேசினால், பட்டீலுக் மனச்சாந்தி கிடைக்கலாம் மக்க எப்படி மன்னிப்பர், மறப்பர்?

கண்கெட்ட பிறகு சூரிய நம காரம் என்று கிராமப்புறங்களி கேட்டிடும் பழமொழியைப்போல தான் பட்டீல் பேச்சு இருக்கிறத

ஆண்டு முடிந்த பிறகு, அவ மன்னிப்பு கேட்கிறார். அக்கிரம நடந்த பிறகு அவர் அடைக்கல கேட்கிறார். அநியாயம் இழைத் அல்லல்பட்ட பிறகு, மறந்துவிடு கள் என்கிறார்.

மன்னிப்பு கொடுத்து, நடந்தவ மறந்துவிட்டு, என்ன செய்யவேண டும் என்கிறார் என்றால், காங்கிர நாடாளவிடவேண்டும் என்கிறா

மன்னிப்பு கிடைப்பதே அரித மறுபடியும் முடி சூட்டுவிழா நட வாத காரியம்! மிக மிக அரிது.

பட்டீல், காலங்கடந்து மன்னி யுங்கள், மன்னியுங்கள், என்கிறா அதனால் பலன் ஏதும் இல்லை.

5-ம் பக்கத் தொடர்ச்சி

கள். அதுபற்றி நமக்கு அக்கறை யில்லை.

ஆனால் இவர்கள் தோல்வி சாதா ரணமானதல்ல- காங்கிரசுக்கு பேரிடி! பக்தவத்சலம், இன்று கூறு வது போல், அரசியல் துறவற பூணுகிறேன் என்று அறிவிக் வேண்டிய பெரிய அரசிய வாதியல்ல அவர் என்பதை நா எப்படி ஏற்றுக்கொள்ள முடியு தோல்வியைத் துடைத்து கொள்ள ஆறுதல்மொழியாக இரு கலாம் இது. ஆனால் உண்மை இ வல்ல! தோற்ற அறுவரும், காங்கி சின் எடுபிடிகளல்ல — நாடா டவர்கள் — அதுவும் முக்கி இலாகாக்களை ஏற்று பணியாற்

11-ம் பக்கம் பார்க்க

# விதைத்தனர்! : : அறுக்கின்றனர்!!

தினை விதைத்தவன், தினையறுப் ான், வினை விதைத்தவன் வினை றுப்பான் என்று, நாட்டுப் புறங் ளில் பழகிடும் பழமொழிக்கு ன்று நல்லசாட்சிகள் நம் சென்னை ாகாண மந்திரிமார்கள். இந்த மதி ந்திரிகள் இந்தத் தேர்தலில் அறுத் தடுத்தது, அவர்கள் பதவியில் மர்ந்து, எதை விதைத்தார்களோ, தையேதான்! தாங்கள் ஆட்சியில் மர்ந்தபிறகு மக்கள் மத்தியில் வதனையை விதைத்தார்கள். ஆகவே வேதனையைத்தானே அறுத் தடுக்க முடியும்? ஆனால், அவர் ளும், அவர்களின் கொடி தூக்கிக ளும், 'பராக்கு'களும் நாட்டுக்கு ங்கள் சாதனை யென்று பேசாத ாளில்லை!

பதினொரு மந்திரிகளில் ஒருவர் போட்டியிடவில்லை. மற்ற பதின் ரில் ஆறுபேர் தோற்றனர். தோற்ற மந்திரிகள் ஒவ்வொருவரும், தோற்றதற்கு ஒவ்வொரு காரணம் கண்டுபிடித்துக் கூறாமல் போய் விடவில்லை.

ஆனாலும், வேதனைதந்த, இத்த ன் மந்திரிகளை, நாட்டு மக்கள் வீட்டுக்கனுப்பிவிட்ட செய்தி, அரசி யலில் முக்கிய நிகழ்ச்சி—காங்கிரஸ் கட்சிக்கு சரியானதோர் படிப்பினை —அதிகார மமதையாளர்களுக்கு சளீர் சவுக்கடி—அதிகார போதை யேறிக் கிடப்போருக்கு தக்கதோர் பாடம்! மந்திரிகளுக்குப் பாடம் புகட்டிய மக்களை மனமார பாராட் டுகிறோம். மக்கள் உள்ளத்தில் மலை போல் வளர்ந்து வரும் அரசியல் தெளிவு வளர்க, வளர்க, என்று கூறுகிறோம்.

சென்னை ராஜ்யத்தில் காங்கிரஸ் ஆளவந்த பிறகு, மந்திரி சபை மூன்று முறை மாறி மாறி வந்தது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், மக் களுக்கு நன்மை செய்யவே, இந்த மாற்றம் என்று பேசினர்! இது அவர்களுக்குள்ளே வளர்ந்துள்ள பதவி பாசம், மன மாச்சரியம் என்று நாம் கூறியபோது ஏசினர்!!

பிரகாசம் வந்தார் — ஒளி வந்து விட்டது, இனி எல்லாம் பிரகாசமாகி விடும் என்றனர். ஆனால் அவரே, பிறகு இருட்டா னார். ஓமாந்தூரார் வந்தார், கலியுக ஜனகர் காணீர் என்று பேசினர். பிறகோ, அவரையும் விரட்டிவிட்டு, குமாரசாமி ராஜா மந்திரி சபை அமைத்தார். இப்படி, மாறி மாறி மந்திரி சபை வந்தும், மக்களுக்கு துன்பம் போய் துக்கம் என்றுதான் நாம் கண்டோம்.

மக்கள், இந்த மதி மந்திரிகளின் ஆட்டபாட்டங்களை மனதில் வைத் துக் கொண்டு, நல்ல படிப்பினை தந்துவிட்டார்கள் — அவர்கள் வாழ்க, அவர்களின் நெஞ்சுறுதி வளர்க!!

பதினொரு மந்திரிகளில் தொழில் மந்திரி பெருமாள்சாமி ரெட்டியார், தேர்தலில் போட்டியிடவில்லை. நல்லவேளை, அவர் தப்பித்துக் கொண்டார் — அவர் மந்திரியாக வந்து, நாட்டுக்குத் தேவையான நன்மையென்று அவர் செய்தது தேர்தலில் நிற்காதது ஒன்றே ஒன்றுதான்! அவரது முன்யோச னைக்கு, நன்றி—அவரது தேர்தல் துறவறத்திற்கு நமது பாராட்டு!

நான்கு மந்திரிகள் எப்படியோ ஜெயித்துவிட்டனர். அவர்கள் எப் பாடு பட்டோ, முட்டியடித்து, வந்துவிட்டனர். கனம் சீதாராம ரெட்டி, பார்லிமெண்டுக்குப் போய் விடுவார். இந்தத் தொல்லையே வேண்டாம், சென்னையை விட்டு சென்றிடுவேன், என்று டெல்லி பார்லிமெண்டுக்குச் சென்று விட் டார்.

விவசாயத்தை வீணாக்கிய ஏ. பி. ஷெட்டி, உணவு நிர்வாகத்தை உருக்குலைத்த ரோச் விக்டோரியா, அரிஜன மந்திரி பரமேஸ்வரன், வெகுபாடுபட்டு, தப்பிப் பிழைத்து விட்டனர்.

இவர்கள் மக்கள் கவனத்தி லிருந்துவிலக்கப்பட்டவர்களாகவே, இவர்கள் ஆளும்பொழுது கருதப் பட்டார்கள். ஆனால், இன்று அவர் களையும் மக்கள் விடுவதற்குத் தயா ராக இல்லை யென்றாலும், தேர்தல் திருவிளையாடல்கள் மூலம் வந்து விட்டனர்—வந்து என்ன செய்வது!

மக்களின் மனதை அரித்துக் கொண்டிருந்த மந்திரிகளை மட்டும் விடவே இல்லை. ஓட ஓட விரட்டி யடித்து விட்டனர்.

காங்கிரசுக்கு, நேரு அதிர்ச்சி வைத்தியம் செய்வதாகக் கூறினார். ஆனால், சென்னை ராஜ்ய மக்கள், செய்த அதிர்ச்சி வைத்தியம்தான் பாராட்டுதலுக் குரியது!

முதல் மந்திரி குமாரசாமி ராஜா தோற்றார் என்ற செய்தி வருகிற வரையில், மக்கள் பலர் மனக்குறை யுடன் தான் உலவினர். தினமும் ஸ்ரீவில்லிபுத்தூர் என்னவாயிற்று, என்று கேட்காத ஆளில்லை—அவர் மீது மக்களுக்கு அவ்வளவு அபார திருப்தி!!

பணநாயகராக, பவனி வந்த கோபாலரெட்டியாரும், 'கோவிந்தா' என்று கேள்விப்பட்ட பிறகு, மக் கள் உள்ளத்திலே களிப்பு!

எவர் போனாலென்ன, எவர் வந்தாலென்ன, நான் ஓடிக் கொண்டேயிருப்பேன் என்றொரு ஆங்கிலக் கவிதையின் முதலடி, பக்தவத்சலத்தை நினைத்துக்கொண் டால்; தானே உதடுகளில் தொனிக் கும். எவர் பிரதமராக வந்தாலும், போனாலும், அவர் மராமத்து மந் திரி! அவருக்கே இந்தத் தேர்தலில் 'மராமத்து' செய்துவிட்டார்கள் மக் கள். அவர், இந்தத் தேர்தலில் வெற்றிபெற என்னென்ன மாய் மாலங்கள் செய்தார்—ஆனாலும் பக்தவத்சலம் படுதோல்வியென்று படித்தபிறகே மக்கள் முகம் மலர்ந்தது.

காளா வெங்கட்டராவ், சந்திர மௌலி, இவர்கள் தோற்றார்கள் என்ற செய்திகள் வரும்பொழு தெல்லாம், தோற்ற மந்திரிகளின் எண்ணிக்கையைக்கூட்டிப்பார்த்துப் பூரித்தனர் மக்கள்.

கல்வி மந்திரியாக இருந்த கனம் மாதவமேனன் மண்ணைக் கவ்விடும் மங்களகரமான மகத்துவநாளை மக் கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். அதுவும் நடந்தேறிவிட்டது.

தோற்றவர்கள், தோல்விக்கு ஒரு காரணம் கண்டுபிடித்துக் கூறுகிறார்

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ உலக நீதிமன்றம் ★

உலக நாடுகளுக்குள் ஏற்படும் தகராறுகளை விசாரித்து, பாரபட்சமற்ற முறையில் நீதி கூறுவதற்காக ஏற்பட்டது உலக நீதி மன்றம்.

இது நெதர்லாந்தின் அழகிய நகரமான தி ஹேக் என்னுமிடத்தில் வேலை செய்கிறது. இதில் பத்துப் பதின்மூன்று நீதிபதிகள் உள்ளனர் — உலகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள். சமீபத்தில், டில்லி அரசாங்கத்தைச் சேர்ந்த சர் பி. என். ராவ் என்பவரும் உலக நீதி மன்றத்தின் நீதிபதிகளுள் ஒருவராக நியமிக்கப் பட்டுள்ளார். எல்லா நீதிபதிகளுமே, உலக சட்ட அறிஞர்களின் முன்னணியில் வீற்றிருக்கத் தகுதி வாய்ந்தவர்களெனத் திடமாகக் கூறலாம்.

இந்த நீதிபதிகள், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் குழுவில் பெரும்பான்மை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாதுகாப்பு சபையால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே பதவி வகிக்க உரிமை பெற்றவர்களாவர்.

உலக நாடுகளுக்குள் ஏற்படும் தகராறுகளை சட்டத்திற் குட்பட்ட முறையில் தீர்த்து வைப்பதின் மூலம், அவைகளுக்குள் போர் ஏற்படாமல் தடுக்கவேண்டும் என்பதே இந் நீதி மன்றம் நிறுவப்பட்டதின் நோக்கம்.

தனிமனிதன் தன் குறைகளைத் தீர்த்துக் கொள்ள நீதி மன்றம் செல்கிறான். சட்டத்தின் பிரகாரம் நீதிபதி அவனுக்குத் தீர்ப்பளிக்கிறார். இத்தீர்ப்பிற்கு அவன் கட்டுப்பட்டவன். இதில், இரண்டு விஷயங்களைக்கவனத்தில்வைத்துக்கொள்ள வேண்டும்: ஒன்று; நீதி வழங்குவதற்காகச் சில சட்டங்கள் இயற்றப்பட்டு அமுலில் இருக்கின்றன. இரண்டு; இச் சட்டங்களின் பிரகாரம் அளிக்கப்படும் தீர்ப்பிற்கு எல்லோரும் கட்டுப்பட்டுத் தானாக வேண்டும். கட்டுப்படாவிடின், அரசாங்கம் தண்டிக்கும்.

சட்டம் வேண்டும் — சட்டப்படி அளிக்கப்படும் தீர்ப்பு நிறைவேற்றப்படவேண்டும்.

உலக நீதி மன்றத்திற்குச் சட்டம் இருக்கிறது — சர்வதேச சட்டம் (International Law) என்ற பெயரளவில் நாடுகள் ஒன்றுடனொன்று தனித்தனியே செய்து கொள்ளும் உடன்படிக்கைகள், அல்லது அவைகள் கூட்டங் கூட்டமாக ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்ளும் ஏற்பாடுகள், சமாதான உடன்படிக்கைகள், பொதுவாக எல்லா நாடுகளும் ஒத்துக்கொள்ளத் தகுந்த "சம்பிரதாயங்கள்" — இவைபோன்றவைகளின் தொகுப்புதான் சர்வதேச சட்டம்.

நாடுகளுக்குள் ஏற்படும் பலப்பல சச்சரவுகளைத் தீர்த்துவைப்பதற்கு, இச் சட்டம் போராதெனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். இன்னுஞ் சிலர், இருக்கிற சட்டத்தையே அமுல் நடத்த முடியவில்லை — இந்நிலையில் புதிய சட்டங்கள் தேவையில்லை என்கின்றனர். இருசாரார் சொல்வதிலும் உண்மையிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட தகராறில் உலக நீதி மன்றம் தீர்ப்பளித்த பின்னர், அத்தீர்ப்பை யார், எப்படி, அமுல் நடத்துவது — என்ற கேள்வி எழுகிறது. தீர்ப்பு நியாயமற்றது என்று கருதும் நாடு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். சரி, பாதுகாப்பு கவுன்சிலின் அபிப்பிராயத்தை அந்த நாடு ஏற்க மறுக்குமானால்? இந்தக் கேள்விக்குப் போர்க்களத்திலேதான் முடிவு காணவேண்டும்.

அதாவது, தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு ஒரு "பலம்" தேவை. இந்தபலம் இன்னும் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற்படவில்லை. அதுவரை, ஒவ்வொரு நாடும் தானே நியாயத்திற்குக் கட்டுப் பட்டால் தான், தீர்ப்பு நிலை பெறக்கூடும்.

இதற்குத் தகுந்த சூழ்நிலை இப்பொழுது காணப்படவில்லையென்றாலும், நீதிபதிகளின் பாரபட்சமற்ற தன்மையும், நேர்மையும், கண்ணியமும் போற்றுதற்குரிய முறையில் அமைந்துள்ளன.

சமீபத்தில், பிரிட்டன் சம்பந்தப்பட்ட ஒரு தகராறில், பிரிட்டனுக்கு விரோதமாக ஒரு பிரிட்டிஷ் நீதிபதி தீர்ப்பளித்தார்! இது அவரது கண்ணியத்தைக் காட்டுகிறது. இருப்பினும் பிரயோசனமில்லை. நீதிபதியின் தீர்ப்பை பிரிட்டன் மதித்து நடக்கவில்லை.

தீர்ப்புகளுக்கு உலக நாடுகள் பணிந்து நடந்தால்தான், உலக நீதி மன்றம் உருவான பலன்தரமுடியும்.

❀

## வருந்துகிறோம்

நமது நண்பரும் நேஷனல் பிக்சர்ஸ் உரிமையாளர்களில் ஒருவருமான திரு. P. A. பெருமாள் அவர்களின் துணைவியார் சாந்தநாயகி அம்மையார் அண்மையில் சென்னையில் இயற்கை எய்திய செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். அன்புத் துணைவியாரை இழந்த நண்பர் அவர்கட்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது துயரம் பிணைந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்களின்

புதிய நூல்கள்

தங்கையின் காதலன்
8-அணா

★

பதவி
8-அணா

★

திண்டுக்கல்லில் தங்கப்பழம்
4-அணா

விற்பனையாளர்க்கு கழிவு 25o/o
செலவு இனம்.

செல்வம் பதிப்பகம்
வெண்கலக் கடைத்தெரு
மதுரை.

# நமது அன்பு வாழ்த்துக்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவோடு, பொதுத் தேர்தலில், காங்கிரஸ் ஆதிக்க வெறிக்கு சாவுமணி யடித்து, வெற்றி பெற்றோரின் பட்டியலைக் (21—1—52 வரை) கீழே தந்துள்ளோம் — உளப் பூரிப்போடு. நமது மதுரைத் தீர்மானப்படி ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டு,

திராவிட நாடு தனியரசுக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்,

அதற்காக சட்டசபையிலும் பார்லிமெண்டிலும் போராடுவேன்,

என்ற உறுதிமொழியோடு, உதயசூரியன்போல, காங்கிரஸ் இருளைக் கிழித்து, வெற்றிமாலை சூடிய இவர்களின் பவனியைப்பற்றி நினைக்கும்போது, பூரிப்புக் கொள்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இத் திருச்செல்வர்களுக்கு, ஆங்காங்குள்ள மக்கள், மலர் மாலைகள் சூட்டி, மகிழ்வு அலைகளைக் காட்டி, தங்கள் ஆனந்த வெள்ளத்தால் மூழ்கடித்தனர். அந்தச் செய்திகள், நம்மை மேலும் மகிழ்வுகொள்ளச் செய்தன — ஐந்தாண்டுக் காலம் இந்நாட்டை ஆட்டிப் படைத்த காங்கிரஸ் வெறியைப் புறமுதுகிடச் செய்து, தமிழக விளக்குகளாம் இவர்களை, தங்களது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து, அகமகிழ்வோடு ஆனந்தமுற்றனர் என்பதால். மக்களின் நற்பணிக்கு நமது இதயம் அன்பு வாழ்த்துகளைக் குவிக்கிறது. ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டு நமது ஆதரவைப்பெற்ற அபேட்சகர்களுக்காக, இரவையும் நேரத்தையும், ஓய்வையும் தொல்லையையும பாராது, புயல்போல தினசரி நமது பிரச்சார வீரர்கள் தமது பணியைச்செய்திருக்கின்றனர். கடமை மறவா அக் காளைகளின் தொண்டு, சட்டசபையில் தென்றலும் நிலவும் பவனிவரப் பயன்பட்டிருக்கிறது—கடந்த இரண்டு மாதங்களாக, பாசிசம் ஒழிய, உரிமைக் கோரிக்கைக்கு உரம் தேட, வாழ்விழந்தோர் வாழ, அவர்தம் பணி, மிக மிகப் பயன்பட்டது என அறிய மகிழ்கிறோம். அவர்தம் உழைப்புக்கு நமது ஆனந்த வாழ்த்துகள்!

பிரச்சார வீரர்கள் ஒருபுறம், பணியாற்ற, கழக ஆதரவு பெற்றோருக்கு வெற்றி தேடித் தரவேண்டும் என்ற வீராவேசத்தோடு, அல்லும் பகலும் அயராது நமது கிளைக் கழகங்கள் பணிபுரிந்திருக்கின்றன—ஒவ்வொரு கழக வீரரும், காங்கிரஸ் முதலையை முறியடிக்க, தங்கள் சக்திக்கு மீறிய அளவு ஒத்துழைப்பளித்திருக்கின்றனர். கொள்கை காக்கும் குன்றங்கள், அவர்கள். அவர்தம் பணிக்கு எதிர்காலம் நன்றி கூறும்! நல்வாழ்வு, புகழுரை சூட்டும்!!

இருள் நீங்கி, புதுவாழ்வு மலர, வெற்றிபெற்று நிற்கும் தமிழகத் திருவிளக்குகளுக்கு நமது அன்பு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்தம், வெற்றி கண்டு களிநடம்புரிந்து மாலைகள் சூட்டி, மனமெல்லாம் இன்பமழை பெய்ததுபோல, ஏறுநடைபோடும் பொதுமக்களுக்குரியோராக நடக்கவேண்டும், நல்வாழ்வு மிளிர அவர்தம் பணி வளரவேண்டும் எனத் தெரிவித்துக்கொள்கிறோம்—வாழ்க வெற்றி விளக்குகள்! வளர்க உரிமைக் கோரிக்கை!!

## பார்லிமெண்டு

| | | |
|---|---|---|
| திண்டிவனம் | ... | திருக்குறள் முனுசாமி |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஏ. ஜயராம் |
| காஞ்சிபுரம் | ... | டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி |
| வந்தவாசி | ... | என். ஆர். முனுசாமி |
| தர்மபுரி | ... | என். சத்யநாதன் |

## சட்டசபை

| | | |
|---|---|---|
| பண்ருட்டி | ... | எஸ். ராதாகிருஷ்ணன் பி. ஏ. |
| விருத்தாசலம் | ... | என். பரமசிவம் பி. ஏ. |
| ,, (ரிசர்வ்டு) | ... | கட்டிமுத்து |
| திருக்கோயிலூர் | ... | டி. டி. முத்துக்குமாரசாமி |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஏ. முத்துசாமி |
| விழுப்புரம் | ... | நாகராஜன் |
| விக்கிரவாண்டி | ... | ஏ. கோவிந்தசாமி |
| திண்டிவனம் | ... | வேணுகோபால் |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஜகன்னாதன் |
| செஞ்சி | ... | கே. அரங்கநாதன் |
| மேல்மலையனூர் | ... | கோபாலர் பி. ஏ. பி. எல். |
| பழனி | ... | எம். பி. மங்களக்கவுண்டர் |
| ஒட்டன்சத்திரம் | ... | எஸ். இலட்சுமிபதி |
| அரூர் | ... | ஏ. துரைசாமி |
| ஓமலூர் | ... | பி. ரத்தினசாமி |
| ஆத்தூர் | ... | எம். பி. சுப்பிரமணியம் |
| கிருஷ்ணகிரி | ... | டி. கிருஷ்ணமூர்த்தி |
| மாயவரம் | ... | கே. ஆர். சம்பந்தம் பி. ஏ. |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஏ. வேலு |
| அரக்கோணம் | ... | பி. பக்தவத்சலம் |
| திருப்பத்தூர் | ... | இ. எல். ராகவன் பி. ஏ. பி. எல். |
| ஆரணி | ... | வி. கே. கண்ணன் |
| வந்தவாசி | ... | எஸ். சோமசுந்தரம் |
| ,, (ரிசர்வ்டு) | ... | தசரதன் |
| வாணியம்பாடி | ... | ஏ. கே. அனுமந்தராயர் |
| செய்யாறு | ... | தருமலிங்கம் |
| போளூர் | ... | எம். ஏ. மாணிக்கவேல் |
| ஸ்ரீபெரும்புதூர் | ... | டி. சண்முகம் |
| முசிறி | ... | தங்கவேலு பி. ஏ. பி. எல்., |

★

# சர்ப்ப நாட்டியம்

[தில்லை-வில்லாளன்]

உரிமைக் குரல் கேட்கிறது! சுதந்திர இசை முழங்குகிறது!!

இதனைக் கேட்ட, ஆதிக்க சர்ப்பம், இடியோசை கேட்டதைப் போல பயந்து நடுங்குகிறது.

ஆதிக்க வெறியாட்சியின் காலம் அஸ்தமித்து வருகிறது என்று கூறுகிறது, அந்த விடுதலைக்குரல்! உரிமையின் சகாப்தம் உதயமாகி விட்டது என்பதை எடுத்துக் காட்டுகிறது, அந்த நாதம்!

சுதந்திர நாதங்கேட்டு, வல்லரசு நாகம், நடுங்குவதை நாம் காண்கிறோம்—உலகம் காண்கிறது!

ஆதிக்கத்தின் சர்ப்ப நாட்டியம் முடிவதைக் காண, உரிமையின் பெருமை யுணர்ந்தோர் அனைவரும் களிப்படைகின்றனர்!

உரிமைக் குரலொலி, இன்று டுனிஷியாவில் கேட்கிறது!

அந்தக் குரலின் எதிரொலி இன்று அகில உலகத்திலும் கேட்கிறது.

டுனிஷியா, வட ஆப்ரிக்காவில் உள்ள சிறியதோர் நாடு.

ஒருபக்கம் மத்திய தரைக்கடல், மற்றொருபக்கம் சஹாரா பாலைவனம் — இரண்டு பக்கங்களிலும் அல்ஜிரியா, டிரிபோலிடேனியா ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்ட நாடு, டுனிஷியா.

டுனிஷியா, வரலாறு வாழ்த்தும் வண்ணச் சிறு நாடு.

டுனிஷியா, இன்று அதன் பெயர் —ஆனால், இதுதான் கிரேக்கரும், ரோமரும் பொற்கால பூபதிகளாக உலவிய நேரத்தில், ஆப்ரிக்கா கண்டமெனவே கருதப்பட்டு வந்தது.

மனிதனின் கண்கள், அதிக தூரம் பரவமுடியாத அந்த நேரத்தில், இன்றைய டுனிஷியாதான், அன்றைய ஆப்ரிக்காவாக இருந்தது. அதற்கு அதன் பெயரே சாட்சி சொல்லும். அராபி மொழியில்இதன் பெயர் இப்ரிக்யா. இதனை லத்தீன் மொழியில் இப்ரிகியா என்று அழைத்தனர். அந்தப் பெயரேதான் ரோமர்களால் ஆப்ரிக்கா என்று அழைக்கப்பட்டது. கார்த்தஜீனிய ஆட்சியிலே இருந்த நேரத்திலும், ரோமர்கள் பிடிக்கு வந்தபொழுதும், பெலிசரிஸ் வென்ற பொழுதும், அராபியர்கள் ஆட்சியில் இருந்த பொழுதும், டுனிஷியா தன் புகழொளி பரப்பத் தவறவில்லை.

பிறகு அங்கு வெள்ளையர்களின் குடியேற்றம் அதிகரித்து, இறுதியில் அது பிரஞ்சுக் காலனியாகி விட்டது. கி. பி 1881ல், பிரஞ்சு ஆதிக்கம் அங்கே உதயமாகிவிட்டது.

சரித்திரச் சிறப்பு பெற்ற டுனிஷியா, இன்று பிரஞ்சு வல்லரசின் இரும்புப் பிடியின் கீழ் இருக்கிறது.

அங்குதான், விடுதலை விருத்தம் இசைப்போரின் தொகை வளர்ந்து, போர்முரசுகொட்டி, அறப்போரும் தொடங்கிவிட்டது.

பிரஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் தேசிய உணர்ச்சி இன்று பொங்கி வழிகிறது.

பிரஞ்சு வல்லரசினை எதிர்த்து அறப்போர் நடத்தும் பெரும் பணியை நடத்தி வருபவர், விடுதலை வீரர்ஹபீப் போர்ஜிபா. அவர்தான், டுனிஷியா மக்களின் உறக்கத்தை நீக்கி, உணர்ச்சியைஊட்டி, விடுதலை வேட்கையைப் பெருக்கி, வீராவேசத்தை எழுப்பி, 'டுனிஷியா, டுனிஷியருக்கே' என்ற உரிமை முழக்கத்தை கிளப்பி வருகிறார்.

சுதந்திர தாகத்தினை தவிர்க்கப் பாடுபடும் விடுதலை இயக்கத்தின் பெயர் நியோ தஸ்தூர் கட்சியாகும். இதன் தலைவர்தான் போர்ஜீபா.

பிரஞ்சு ஆதிக்கம் நீங்கி, டுனிஷியா, சுதந்திர ஆட்சி மலர வேண்டும் என்று சுதந்திர உணர்ச்சி கிளப்பிய அந்த விடுதலை வீரரை, ஆதிக்க சர்ப்பம் கடித்துவிட்டது.

விஷ வேகத்தின் முழு வலிமையையும் காட்டிவிட்டது, பிரஞ்சு ஆதிக்க சர்ப்பம்.

ஆனால், அந்த விஷம், போர்ஜீபாவை எதுவும் செய்யவில்லை.

நாட்டின் இதய கீதத்தை முழக்கிய தலைவனை, பிரஞ்சு ஆட்சியினர் சிறையிட்டு விட்டனர்.

சிறையிலே தங்கள் தலைவரைப் பூட்டிவைத்துவிட்டு, மக்கள்வறிதே வெளியில் உலவிட, அவர்கள் உணர்ச்சியற்ற மரக்கட்டைகளுமல்ல, மண் பொம்மைகளுமல்ல!

மக்கள் மன எரிமலை வெடித்தது, கிளர்ச்சி பெருகிற்று.

தொழிலாளர் யூனியன், ஒரு பெரிய வேலைநிறுத்தம் நடத்திட முடிவு செய்தது. பிரஞ்சு ஏகாதிபத்தியம் மக்கள் கிளர்ச்சியை அடக்க வெறிகொண்டெழுந்தது.

போர்ஜிபா, மக்களைத்திரட்டுவேன், தேசிய மாநாட்டைக் கூட்டுவேன் என்று கூறினார். ஆனால், அவரது கட்சிக்கு, தடைபோடப் பட்டிருந்தது. தடையை மீறுவேன், தாய் நாட்டு விடுதலைப் போருக்காகப் போராடுவேன், மாநாடு கூட்டுவேன், டுனிஷியாவிற்குமுழு விடுதலையைவாங்கித் தருவேன் என்று முழக்கமிட்டார். இதுதான், பிரஞ்சு ஆதிக்கநாகத்திற்கு இடியோசையாகி விட்டது.

நாட்டோர் போற்றும் தலைவரை ஆட்சியிலே அமர்ந்துள்ள அந்நிய ஏகாதிபத்தியம் கைது செய்தது. சிறையில் தள்ளிற்று.

நாடோ, கொந்தளிக்கத் தொடங்கிவிட்டது. நாட்டின் தலைவருக்கு, நாட்டை தம்வேட்டைக் காடாக்கிக் கொண்ட வெளிநாட்டார் செய்த கொடுமையைத் தாங்கமுடியவில்லை.

பொது வேலைநிறுத்தம் செய்வதின் அடையாள மறியலில் பிரஞ்சு ஏகாதிபத்தியம் புகுந்தது.

அந்த ஏகாதிபத்திய வெறியர்கள் பட்டாளத்தையே ஏவினர், அடித்தனர், உதைத்தனர், மிதித்தனர், துவைத்தனர் — ஐயோ! சுட்டனர்! சுட்டனர்!! சுருண்டு விழுந்தனர், விடுதலை வேட்கையால் உந்தப்பட்டு வந்த மூவர்- அந்நாட்டின் சொந்தக்

காரர்கள் டுனிஷியாவின் மண்ணிலே பிறந்து மண்ணிலே வளர்ந்தவர்கள். அவர்களைத்தான், குடியேற வந்து, அந்நாட்டின் உரிமை வாழ்வை படு சூரணமாக்கிய அந்நிய ஏகாதிபத்தியத்தினர் சுட்டனர். முப்பத்து மூவர் படு காயமடைந்தனர்.

டுனிஷியா பிரச்சினையை ஐக்கிய நாட்டு பாதுகாப்பு சபைக்குக் கொண்டுபோக, டுனிஷிய மந்திரிகள் இருவர் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளனர். 'டுனிஷியா மக்களுக்குரிய நியாயமான உரிமைகளை பிரஞ்சு சர்க்கார் கொடுக்க மறுக்கிறது. பொதுத் தேர்தல் நடத்தி, தேசிய சபையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எந்த வகையிலும் நியாயமானது, இதனை மறுப்பதால்தான், மக்கள் கிளர்ச்சி டுனிஷியாவில்' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மந்திரிகளும், பாரிசில் உலவுகின்றனர். அவர்கள் நேரடியாக, பிரஞ்சு சர்க்கார்மீதுள்ள குற்றச்சாட்டை ஐ. நா. சபைக்குக் கொண்டுபோக முடியாது.

வெளியுலகத்தொடர்பு கொள்வதென்றால், அது முதலில், வெளிநாட்டிலாகா காரியதரிசிமூலம் செல்லவேண்டும். அவரோ, ஒரு பிரஞ்சுக்காரர்!

டுனிஷியாவின் நிர்வாகத்தில் இன்னமும், இரட்டையாட்சிமுறை தாண்டவமாடுவதைப் பார்க்கலாம்.

மந்திரிசபையில் பதினைந்து மந்திரிகள் இருக்கிறார்கள். அதில் ஏழு பேர்களே டுனிஷியர்கள். மற்றவர்கள் எல்லோரும் பிரஞ்சுக்காரர்கள்.

மந்திரிசபை யென்பது, அதிகாரமற்ற ஒரு அலங்காரக் கொலுமண்டபம். ஆலோசனை தரும் குழுவாக அது இருந்து வருகிறதே தவிர, ஆளும் நிலையும், வலுவும் அதற்குக் கிடையாது.

நிர்வாக இயந்திரத்தை நடத்துவிப்போரும், ஆள்வந்த அந்நியர்களே. எங்கும் பிரஞ்சு ஆதிக்கம்.

பணம் படைத்தோர், பதவியில் இருப்போர், நிர்வாக வேலைகள் செய்வோர், நிபுணர்கள் என்று தொழில் துறையில் பேசப்படுவோர் எல்லாம் பிரஞ்சுக்காரர்கள்.

ஆகவேதான், பிரஞ்சு ஆட்சியின் நா அசைந்தாலொழிய, அங்கு எதுவும் செய்யமுடியாது.

எனவே டுனிஷியா மந்திரிகள் சலே பென் யூசுப், முகமது பாட்ரா ஆகியோர் ஐ. நா. சபையில் அலங்காரப் பார்வையாளராக வேண்டுமானால் போக முடிகிறதே தவிர, அந்த எதையும் பேசமுடியவில்லை.

ஐ. நா. சபையின் பொதுக்காரியதரிசி டிரிக்விலி, பிரஞ்சுக்காரருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார், டுனிஷியா விவகாரத்தை, ஐ. நா. சபை நேரடியாக எடுத்துக்கொள்ளலாமா இல்லையா என்று முடிவு செய்யும்படி!

பிரஞ்சுமந்திரிசபையோ அடிக்கடி மாறும் அற்புத சரித்திரம் பெற்றது. சென்ற வாரத்தில் மாறிய மந்திரி சபையின் முதல்வர் எட்கர் பாரும், வெளிநாட்டு மந்திரி ஷூமனும் டுனிஷியா பற்றிய புதிய மந்திரி சபையின் கொள்கை பற்றி இன்னமும் தெளிவாக்க வில்லை.

ஆனால், பிரஞ்சு வல்லரசு, இப்பிரச்சினையை ஐ. நா. சபை எடுக்கக் கூடாது என்று வாதாடவழியிருக்கிறது.

கி. பி. 1881ல் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி, பிரஞ்சு ஆட்சியின் அனுமதியின்றி, வெளி நாடுகளுடன் தொடர்பு கொள்ளக் கூடாது. அதனைக்காட்டி மிரட்டுகின்றனர்.

இந்தோ சீனாவில், தங்கள் கைபொம்மையாக, பாவாடாய் கிடைத்தாரே, அதைப் போலத்தான், டுனிஷியாவில் பே கிடைத்துள்ளார். அவரை அலங்கார அதிகாரத் தலைமையிலே அமர்த்திவிட்டு தாங்கள் சூத்திரதாரிகளாக இருந்து ஆட்டுவிக்கிறார்கள்.

மந்திரிகள் இருவரும் ஐ. நா. வுக்கு கொண்டு சென்றுள்ள வழக்கில், பேயின் கையொப்பமில்லை. ஆகவே, அதனை ஐ. நா. சபை ஏற்கக்கூடாது என்றும் பேசுகிறார்கள்.

பே, அவர்களின் உருட்டு பொம்மை — ஆகவேதான் அவர் சம்மதம் வேண்டும் என்கிறார்கள்.

ஆனால், டுனிஷியாவில் உண்மையில் அதிகாரம் செலுத்துபவர் பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி—ரெஸிடெண்ட் ஜெனரலாக இருக்கும் ஹூயிபேரிலியர்.

பேயையும் ஆட்டிவிக்கும் பெரும் பேய் அவர்தான். ஆகவேதான், வல்லரசின் வக்கீல்கள், அப்படிப் பேசுகிறார்கள்!

டுனிஷியா, மத்திய தரைக்கடலோரத்திலுள்ள ஒரு சுவையுள்ள கனித்தோட்டம். அதில் மந்திகள் புகுந்து அழிப்பது போல பிரஞ்சு மக்கள் புகுந்துவிட்டனர்.

டுனிஷியா, ஒரு வண்ணமலராகத்தானிருந்தது. வண்டு மனம் கொண்ட ஐரோப்பிய வல்லரசினர் வந்து புகுந்து விட்டனர்.

டுனிஷியா சிறிய நாடு—இருந்தாலும் சிறப்பாக வாழ்ந்தநாடு. இன்று சீரழிக்கப்பட்டாலும், சீரும், சிறப்பும், பேரும், புகழும் கொண்ட நாடு.

இதன் பரப்பு 48,300 சதுர மைல்களே. இருந்தாலும், இதன் மீது நாட்டம் விழுந்ததற்கு காரணம், இதன் வளமும், செழிப்புமே யாகும்.

வாழ்வோரின் தொகையிலே, வந்தேறிகளின் தொகையைப் பாருங்கள். வந்து சேர்ந்தவர்கள், வாழ்ந்திருந்தோரை, வீழ்த்திய வரலாற்றையும் பாருங்கள்.

பழைய கணக்குப்படி, அங்குள்ளோரின் தொகை 2, 215, 399 பேர்கள். வந்து குடியேறியோர் எண்ணிக்கை 195,293.

அம்மண்ணிலே பிறந்த, அம் மண்ணின் சொந்தக்காரர்களை நேற்று வந்து குடியேறியவர்கள் ஆட்டிப் படைக்கிறார்கள்.

குடியேறியவர்களில் பிரஞ்சுக்காரர்கள் 19,427. இவர்கள் தான், நாட்டுக்குச் சொந்தக் காரர்களை, அடக்கியாள்கிறார்கள்.

சிலர், பலரை வதைக்கிறார்கள். அந்தச் சிலர் இன்று வலியோராக இருக்கலாம். பலர் இன்று எளியோராக இருக்கலாம். ஆனால், வலியோர் சிலர், எளியோர் தமை வதையே புரிகுவதா, என்ற முழக்கம் தான் அங்கு எழுந்துள்ளது.

அந்த முழக்கத்தின் மூலவர்களை இன்று காராக்ருகத்தில் தள்ளிவிட்டனர்.

தினமும் செய்திகள் வந்தவண்ணமுள்ளன. மக்கள் கிளர்ச்சி வளர்கிறது-பெரிதாகிறது-விரிவடைகிறது.

இன்று சிலர், பலரை அடக்கும்

கொடுமை அவர்களின் கண்களுக்குத் தெரிகிறது.

அதுவும் அவர்கள், தங்கள் கலை, பண்பு, மொழி, நாகரீகத்திற்கு ஒட்டிவராதவர்கள்—வந்த அந்நியர்கள்—அவர்கள் ஆளுகை கூடாது என்று கூறுகின்றனர்.

புதிய தேர்தலை நடத்தி, புதிய ஆளும் சபையை அமை என்ற கோரிக்கை குரல், ஆதிக்க சர்ப்பத்தின் ஆர்ப்பாட்டத்தால், எச்சரிக்கை குரலாக மாறிவிட்டது.

பேசியவர்கள் இன்று செபலில் இறங்கிவிட்டார்கள்.

வேலை நிறுத்தங்கள் செய்கிறார்கள். அங்கங்கே, வேதனை தரும் அந்நியர்களை மடக்குகிறார்கள் — அவர்களை வதைக்கிறார்கள், வாட்டுகிறார்கள்.

பெண்களும் போர் புரிகிறார்கள்—சிறுவர்கள் கூட களத்தில் இறங்குகிறார்கள்.

இவர்களை, பிரஞ்சு போலீசார் அடிக்கிறார்கள் — விரட்டுகிறார்கள். ஆனால் டுனிஷியாவின் மக்கள் கிளர்ச்சி மங்கவில்லை, ஒளி விடுகிறது! கருகவில்லை. மலர்கிறது, புரட்சி மணம் வீசுகிறது!!

சிலர், அதுவும் குடியேற வந்த அந்நியர்கள், நம்மை சீர்குலைப்பதா என்ற எண்ணம் வரும்பொழுதெல்லாம் சீறுகிறார்கள்—புயல் காற்று போல போருக்கு கிளம்புகிறார்கள்.

நியூ தஸ்தூர் கட்சியும், அதன் தலைவரும், இந்த எண்ணத்தை, உற்சாக நீர் ஊற்றி, உணர்ச்சி எரு விட்டு வளர்த்து வரவே தான் சிறைக் கதவு திறந்து, சிங்கத்தை உள்ளே தள்ளி பூட்டி வைத்து, சிறு நரிகள் காவல் காக்கின்றன.

இந்த சுதந்திர எண்ணம், வளரும் நிலையிலே, அழித்துவிட பிரஞ்சு ஆதிக்கத்தார் வெகு பாடு பட்டார்கள்.

டுனிஷியாவை விட்டுச் செல்ல முடியுமா? கோதுமை வயல்களைக் கண்டுள்ளார்கள் ஆலிவ் விளைவை அறிந்துவிட்டார்கள். கனி குலுங்கும் தோட்டங்களைப் பார்த்துவிட்டார்கள். எப்படி அதனை விடுத்துச் செல்வார்கள்? சுரண்டுவதில் சூரர்களான, ஏகாதிபத்திய சீலர்களல்லவா, அவர்கள்!

ஆடுகள், குதிரைகள், ஒட்டகங்கள் வளர்ப்பு வேலையைக் கூட பிரஞ்சுக்காரர்கள் பிடித்துக்கொண்டனர்.

மத்திய தரைக் கடல் சீதோஷ்ணத்தை யொட்டி வளரும் காடுகள் ஏராளம் அங்கு. அவைகளின் விலையும், மதிப்பும் அவர்கள் அறிவார்கள். பவளம் கடலுக்கடியில், நீரில் மீன்கள், நிலத்தைத் தோண்டினால் உலோகப் பொருள்கள் பலப்பல காண்கிறார்கள். எப்படிச் செல்வார்கள், இத்தனைச் செல்வங்களையும் விட்டு விட்டு? ஆகவே தான் சுதந்திர எண்ணத்தை அடக்க, அது எழுந்த நாளிலிருந்து பல முயற்சிகள் செய்தனர்.

வல்லரசுகள், தங்கள் வலைக்குள் சிக்கிய நாடுகள் போராடினால் வழக்கமாகக் கையாளும் முறையைப் பயன் படுத்தினர் பிரஞ்சு ஆட்சியினர்.

ஒரு கலம் நெல் கேட்கும் விவசாயிடம், ஒரு படி நெல்லைக் கொடுத்து, திருப்திபடுத்த முயற்சி செய்யும் மிராசுதாரனைப் போல, பிரஞ்சு ஏகாதிபத்தியம் நடந்து கொண்டது.

பூரண விடுதலை கோரி, டுனிஷியர்கள் புரட்சிக் கொடி உயர்த்தப் போகிறார்கள் என்றவுடன், நன்மை செய்வதாகக் காட்டிக் கொள்ள புதிய உரிமைகளை வழங்கினர்.

1950ல், இந்த தந்திர முறையின் மூலம், பிரஞ்சு சர்க்கார், தனது பிடியை இன்னமும் விடாமல் வைத்துக்கொள்ள முயன்றது — ஆனால் இன்று தோற்றுவிட்டது.

ஆளும் சபைக்கு, பிரஞ்சு ரெஸிடெண்ட் தலைமை வகித்து வந்தது போய், டுனிஷிய பிரதமரே தலைமை வகிக்க வேண்டும் என்று உரிமை வழங்கப்பட்ட பொழுது, மகிழ்ந்தனர் டுனிஷியர்கள். ஆனால் அந்த மகிழ்ச்சியிலேயே மயங்கிக் கிடந்து விடுவார்கள் என்று எண்ணினர். ஏமாந்தனர்.

நிதி சம்மந்தமான பிரச்சினைகள், ஆளும் சபையின் பரிசீலனைக்கு வர வேண்டும் என்றனர்.

பிரஞ்சுக்காரரும், டுனிஷியரும் சர்க்கார் உத்தியோகங்களுக்குப் போக, ஒரே மாதிரி தேர்விற்குப் போகவேண்டும் என்று ஏற்பாடு செய்தனர்.

உயர்தர உத்தியோகங்களில்பாதியையும், கீழ்த்தர உத்தியோகங்களில் முக்கால் பகுதியையும், டுனிஷியருக்கென ஒதுக்கி வைக்கத்திட்டம் தந்தனர்.

இவைகளை ஏற்றுக்கொண்டனர். மகிழ்ச்சிகூட அடைந்தனர். ஆனால் திருப்தி அடையவில்லை.

பசியெடுத்துக் கிடப்பவனிடம், தண்ணீர் ஒரு குவளை தந்துவிட்டால்மட்டும் போதுமா? அப்படித்தான் டுனிஷியர்கள், இந்தசீர்திருத்தங்களுக்குமேலும் திருத்தங்கள் வேண்டினர்.

இந்த திருத்தங்களால் ஏதும் பெரியமாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. ஆட்சியில் ஆட்டிப்படைப்போர், அடங்கி பணி புரிவோர் என்ற இரட்டைநிலை மாறவில்லை. ஜனநாயகம் வந்துசேர்ந்துவிடவில்லை. இருந்தும் அவர்கள் அவைகளை ஏற்றுக் கொண்டுமேலும் போராடுவோம், வெற்றி பெறுவோம் என்று இருந்தனர். ஆனால் பிரஞ்சு சர்க்காரோ அத்தோடு தீர்ந்தது என்று தப்புக் கணக்கு கேட்டனர்.

இதைவிட விசித்திரமானது, இந்த சாதாரண திருத்தங்களைக் கூட, டுனிஷியாவிலிருந்த பிரஞ்சு மந்திரிகள் எதிர்த்தார்கள்.

டுனிஷியாவின் விடுதலை விரும்பிகள், திருத்தங்களுக்கு அடுத்தபடி, விடுதலைப் பிரகடனம் வந்துவிடும் என்று எதிர்பார்த்தனர். வரவில்லை.

## நன்றி

பொங்கல் திருநாளில், திராவிடத்தின் பல பகுதிகளிலிருந்தும், பொங்கல் வாழ்த்துகளை அனுப்பியிருந்தார்கள், தோழர்கள். அந்த வாழ்த்துகள், செந்தமிழின் செழிப்பைமட்டுமல்ல, நாட்டில் சொல்லேருழவர்களாக நாம் பணியாற்றியதால் ஏற்பட்டுள்ள மனவளத்தையும் படம் பிடித்துக் காட்டுவதைக் காண பூரிக்கிறேன்; புதிய வலிவு கொள்கிறேன்; புதிய நம்பிக்கை பெறுகிறேன். வாழ்த்து அனுப்பிய தோழர்கள் அனைவருக்கும் இதன்மூலம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றி செலுத்துகிறேன்.

அண்ணாதுரை.

ஆகவே, மக்களின் விடுதலைப் போர் துவங்கிவிட்டது

பார்ஜிபா, பரங்கியரின் சிறையில் கிடக்கிறார்.

நாட்டின் சொந்தக்காரர்களின் நெஞ்சிலே நர்த்தனமாடும் அவர், வெஞ்சிறையிலே வாடுகிறார்.

அந்தக் கொடுமையை பொறுக்க முடியாது பொருமுகிறார்கள், அடக்க மனம் படைத்தோர் — பொங்கியெழுகிறார்கள், ஆத்திர குணமுள்ளோர், போருக்குச் செல்வோம், புறப்படுவீர் என்று போர் முரசு கொட்டுகிறார்கள், தீவிர வாதிகள்.

டூனிஷியா, சிறியநாடு — அதற்காக அதனை அடங்கித்தானிருக்க வேண்டும் என்று யாரும்உபதேசம் புரியவில்லை.

சஹாரா, பெரியது — ஆகவே, அது டூனிஷியாவுக்குத் தலைமை வகிக்கவேண்டும் என்று பித்தர் தவிர வேறு எவரும் பேசமாட்டார்கள்.

வலியோர் சிலர் வந்து, வாழ்ந்திருப்போரை வாட்டுவதா என்பதே அவர்கள் முன் உள்ள பிரச்சினை.

சிலர் அந்நியர்கள் — அயலார், எத்துறையிலும்! அவர்களுக்கு அடங்கிக்கிடக்கிறோமே என்கிற பொழுது வெட்கமும், துக்கமும் அவர்களை வாட்டுகிறது.

ஆகவேதான் கொலை வாளினை எடடா, மிகு கொடியோர் செயல் அறவே என்ற போர் முரசம் ஒலிக்கப்படுகிறது.

இந்த முரசத்தின் எதிரொலி எங்கும் கேட்கத்தான் செய்யும்.

நியோ தஸ்தூர் கட்சியினர் நேருவுக்கு, சென்ற ஆண்டு இங்கு வந்த டூனிஷியா குழுவாரிடம் அளித்த வாக்குறுதியை நினைப்பூட்டி, உதவி வேண்டியுள்ளனராம்.

டூனிஷியாவில், பிரஞ்சு ஏகாதிபத்தியம் ஆடும் சர்ப்ப நாட்டியத்தை, சுதந்திர வேகங்கொண்டவராலும் கண்டிக்காமலிருக்கமுடியாது.

உரிமையின் சகாப்தம், இருபதாம் நூற்றாண்டு. இதில் பிரஞ்சு ஏகா[illegible]த்தியம், பழையமுறையைக் கடை[illegible]டித்து உலகநா[illegible]கள் பரிதசிக்க[illegible]தக்க முறையில் வீழ்ச்சியடையக்கூடாது என்பதனை எடுத்துக்காட்டியாக வேண்டும்.

டூனிஷியா பிரச்சினை பற்றி நேருவின் ஆதரவு கோரியுள்ளனர்.

ஆனால் அவரோ, நெருக்கடியான நேரத்தில் சிக்கி, நிமிடத்திற்கு நிமிடம் துயரச்செய்திகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

அவர் டூனிஷியாவின் பக்கம் பார்வை திருப்புகிறாரோ இல்லையோ, திராவிடத்தின் பக்கம் திருப்பியே ஆகவேண்டிய நிலையேற்பட்டு விட்டது.

திராவிடம், டூனிஷியாவைப்போல பல மடங்கு பெரிய நாடு.

அதன் வளங்களும், சிறப்புகளும், எத்தனையோ மடங்கு அதிகம்.

திராடத்தின் அரசியலில் வந்தேறிகள் கூட அல்ல, இருந்த இடத்திலிருந்தபடியே, வடவர்கள் ஆட்டிப் படைக்கிற கொடுமையை யார் தான் சகிக்க முடியும்?

டூனிஷியாவின் இடத்திலே திராவிடம்! பிரஞ்சுக்காரர் இடத்தில் பனியா! இப்பொழுது எண்ணிப் பாருங்கள்.

நேருவின் பார்வை இந்தப்பக்கம் திரும்பவில்லை. திருப்பும்படி இந்தத் தேர்தல் செய்து விட்டது.

டூனிஷியாவில், பிரஞ்சு ஏகாதிபத்தியம் ஆடுவது சர்ப்ப நாட்டியம்—இங்கு வடநாட்டாதிபத்தியம் நடத்தியது, நடத்துவது மந்திநடனம்—இதனை நேரு காணட்டும்! நிலைமை மாறட்டும் — நிலைமையை மாற்றுவோம்!

❁

## பிறப்பு

✲

தோழர் முல்லைவடிவேல் துணைவியார் திருமதி மரகதவல்லி அம்மை 7—1—52ல் ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்த செய்தி கேட்டு மகிழ்கிறோம்.

✲

வேலூர் தோழர் ஏ. எஸ். குப்புசாமி அவர்களின் துணைவியார் திருமதி கிருட்டினம்மாள் 19—1—52ல் பெண் மகவைப் பெற்றெடுத்தார். தாயும், சேயும் நலம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

யவர்கள். அவர்கள் இன்று மக்களால் முகத்தில் கரிபூசப்பட்டு, முக்காடிட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

மந்திரிகள் நால்வர் ஜெயித்திருக்கிறார்களே, என்று எவரும் எண்ணத் தேவையில்லை. அவர்கள் ஜெயித்துவந்த தொகுதிகளில், காங்கிரசை ஒழித்துக்கட்ட கச்சைகட்டிவந்தவர்களின் எண்ணிக்கையையும் பாருங்கள். மந்திரிகளுக்கு கிடைத்துள்ள ஓட்டுகளையும் கணக்கிட்டு பாருங்கள் பிறகு தெரியும்.

அவர்கள் காங்கிரசின் பெயரால் ஆட்சி பீடம் ஏறிச் செய்த அவலங்கள், இன்று ஆந்தைக் குரலெடுத்து அலறுகின்றன.

முற்பகல் செய்தார்கள். பிற்பகலில் அதன் பலனைக் காண்கிறார்கள்.

துயரத்தை விதைத்தார்கள்— தோல்வித் துயரத்தை அறுக்கிறார்கள், நம் மந்திரிகள்!

மக்களின் குரலை மதிக்காத எவருக்கும் இந்த கதிதான்—மந்திரியாக இருந்தவர்களுக்கு மக்கள் காட்டிய இதே பாடந்தான், இனி மந்திரியாக வரப்போகிறவர்களுக்கும்! ✲

## வருக! வருக!

தோற்ற மந்திரிகள் ஆட்சி பீடத்தில்! வெற்றி பெற்ற தோழர்கள் சிறைச்சாலைகளில்!

இந்த விபரீத போக்கை, முற்போக்கு சக்திகள் எல்லாம் எதிர்த்தன. போராடின. கம்யூனிஸ்ட் தலைவர்கள், ராமமூர்த்தி, நாகிரெட்டி ஆகியோரைத்தான் காவல் கைதிகளாக வைத்துக்கொண்டு ஆட்சியாளர் அடம் செய்தனர்.

நாகிரெட்டி வெளியில் வந்துவிட்டார். ராமமூர்த்தி வெளியில் விடப்பட்டு, மீண்டும் வேறுவழக்குகள் சம்மந்தமாக கைது செய்யப்பட்டுள்ளார். அவரை ஜாமீனில்விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்மூடிக்கிடந்த, ஆட்சியாளர் கண் திறந்தனர். தோழர்கள் வெளியில் வந்தனர். அடக்குமுறை தீயில் வெந்து, இன்று தணலில் வெந்த தங்கமென விளங்கும் தோழர்களை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

✲

# நேசக் கரம் இணைப்பீர்! நீசத்தனம் ஒழிப்பீர்!!

"தூக்கிலிட்டுவிட்டோம்!" —நெஞ்சு நெருப்பாகும் இந்தச் செய்தியை, மலேய அரசாங்கம், உலகுக்குத் தந்திருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து, வயிற்றைக்கழுவ, கடல் கடந்து சென்ற ஏழையை— பிணமாக்கிவிட்டார்கள் —தூக்கிலே தொங்கவிட்டுவிட்டார்கள். **28—12—51** அன்று மலேய பூமியில், அந்த ஏழை வாலிபரின் உயிர் பறிபோய்விட்டது. பெரியண்ணன் தூக்கிலேற்றப்பட்டுவிட்டார்! பிணமாக்கப்பட்டார்!!

நெஞ்சு துடிக்கும் செய்தி இது. தூக்கிலே துடித்துச் செத்த பெரியண்ணன், மலேய சொத்துக்களைச் சுரண்டும் மூலதனத்தோடு சென்றவரல்ல—கையையும் காலையும் சொத்தாகக் கொண்டு, உழைப்பைச் சிந்தி, ஒரு சில காசுகளைப் பெற்று, தமிழகத்திலே கண்ணீருங் கம்பலையுமாகக் கிடக்கும் தனது குடும்பத்தாரின் வயிற்றைக் கழுவும் ஆவலோடு, சென்றவர். அவருக்குப் பரிசு—சாவு! மரணமேடை!!

'பொன்விளையும் பூமி இது' என்று போற்றித் துதிபாடும், திருவிடப்பூமியிலே, வாழமுடியாது, கடல் கடந்து சென்றார்— ஆனால் வாழ்வு அங்கும் கிடைக்கவில்லை பிணமானார்! பிணமாக்கப்பட்டார்!! மலேய சர்க்காரால் கொல்லப்பட்டுவிட்டார்!!!

கண்ணீர் வடிக்கிறோம்—அந்தக் காளையை நினைத்து! ஒருசில திங்களுக்குமுன், அவருக்கு இத்தகைய தண்டனை தரப்படலாம் என்றொரு செய்தி, வந்தது. செய்தி தேள் போல இருந்தது — கணபதியை இழந்தோம்! மலேயா சாம்பசிவத்தை மரணப் பிடியிலிருந்து விடுவிக்கபட்டபாடு ஏராளமாயிற்றே— இப்போது, அதேவரிசையில் இன்னொரு தமிழகச் செல்வனையுமா இழக்கவேண்டும்? ஐயகோ! என்ன கொடுமை, இது! என்று கலங்கினோம்—நமது மாநில மாநாட்டிலும், குற்றக்கூண்டிலே நிற்கும் இவர்கள் விடுதலை செய்யவேண்டுமென மலேய சர்க்காரைக் கோரி தீர்மானம் விடுத்தோம். நம்மைப் போலவே, இங்கே வாழும் முற்போக்குக் கட்சிகள் மலேய சர்க்காரைக் கேட்டுக்கொண்டன. ஆனால் வெறியர்கள் நம கோரிக்கையை அலட்சியம் செய்து, ஒரு உயிரை, பதைக்கச் சாகடித்திருக்கின்றனர்!

நெஞ்சுவேகும் இந்தக் கொடுமை நடவாமல் தடுக்கவேண்டியபொறுப்பும் அதிகாரமும் உடைய டில்லி அரசாங்கமும், பாராமுகமாய் இருந்திருக்கிறது. தமிழகச் செல்வன் ஒருவன் உயிரைக் காப்பாற்றித்தர தவறிவிட்டது! வழக்கம் போல அலட்சியமாக இருந்திருக்கிறது!!

தனது நாட்டு மகன், இன்னொரு நாட்டில் சித்திரவதைக்காளாகி செத்து மடிவதைத் தடுக்க வேண்டிய இந்திய சர்க்கார்—வாய் மூடிக் கிடக்கிறது—சித்திரவதை செய்யும், மலேய சர்க்காரோடு, 'காமன்வெல்த் நேசம் — கலங்குமோ நம் பாசம்' என்று சிங்காரப பண்ணிசைத்துக் கிடக்கிறது. நமது சகோதரன் உயிரை நமக்குப் பெற்றுத்தரவில்லை. தரவில்லை என்பது மட்டு மல்ல, தருவதற்கான முயற்சிகளையும் எடுக்கவில்லை!

பெரியண்ணன், போய்விட்டார். இன்னும் பல 'பெரியண்ணன்களை' தூக்கிலே ஏற்ற துடித்துக்கிடக்கிறதாம், மலேய ஆட்சி.

இந்தக் கொடுமைகள் ஒழிய வேண்டும்! குற்றஞ் செய்தோரை நீதி முன் நிறுத்தி—தண்டனை தருவதோ, விடுதலை செய்வதோ தான் முறை. அதற்குப் பதிலாக, 'இவன் ஒரு பயங்கரவாதி!' என்று கூறுவதும் உடனே தூக்கிலே தொங்க விடுவதுமென்றால், நாமென்ன அநாகரீகக் காலத்திலா வாழ்கிறோம்! நலம் விரும்புவோரே— தாயகச் சகோதரர்களே இந்தக் கொடுமைகள் ஒழிய ஒன்று படுங்கள்!

'எல்லோரும் மேற்படி செயலைக் கண்டித்து இந்திய சர்க்காருக்கும் மலேய சர்க்காருக்கும் உடனே கண்டனங்கள் அனுப்ப வேண்டுகிறோம்". என, சென்னை நாடு கடத்தப்பட்டோர் சங்கம்வேண்டுகோள் விடுத்திருக்கிறது. சகலமுற்போக்குக்கட்சிகளும்ஒன்றாகநின்று இந்தக் கொடுமை ஒழிய நேசக் கரம் தூக்கவேண்டும்! மனித வெறியை மண்டையிலடிப்போம்! முற்போக்குக் கட்சிகளே — நம் குரல், எதேச்சாதிகார வெறியை சுக்குநூறாக்கட்டும்!

※

## வாசகர்களுக்கு

கடிதம் எழுதும் தோழர்கள், பத்திரிகை சம்மந்தமானதாக இருந்தால், ஆசிரியர் என்றும், சந்தா, ஏஜன்ஸி ஆகியவை சம்மந்தமாக இருந்தால் நிர்வாகி என்றும் முகவரி எழுதவேண்டுகிறோம்.

## தோழர்களுக்கு

கழக சம்மந்தமான தகவல்கள் எழுதுவதானால், பொறுப்பாளர், தி. மு. க. தலைமைநிலையம், காஞ்சீபுரம் என்றும், கழகசம்மந்தமாக சி.என். ஏ.நேரடியாகபார்க்கவேண்டியசெய்திகளை, பொதுச்செயலாளர், தி. மு. க. என்றும், முகவரி எழுதுங்கள்.

## கிளைக் கழகங்களுக்கு

தி. மு. க. தலைமை நிலையம் இன்னும் சில திங்கள்வரை, காஞ்சீபுரத்திலேயே இயங்கி வரும். ஆகவே, சென்னை ராயபுரம் முகவரிக்கு எழுதினால் கால தாமதமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A. at 'Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.